ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නූතන ලෝක ඉතිහාසය II (I කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி I)
Modern World History II (Part I)

**25 C T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

நவீன உலக வரலாறு - கி.பி **1500** - கி.பி **1989** வரை

சுட்டெண் : ...............................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.

※ **பகுதி I** இல் **1 - 40** வரையான **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.

※ **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.

※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) நைல் (2) தைகிறிஸ் (3) குவாங்கோ
(4) அஸ்வான் (5) அமேசன் (……)

**2.** (1) மொரிசியஸ் (2) சுமாத்திரா (3) ஜாவா
(4) போர்ணியோ (5) செலிபிஸ் (……)

**3.** (1) லியானாடோ டாவின்சி (2) திதியன் (3) இராபேல்
(4) டொனரெலோ (5) பிரான்சிஸ்கோ கீசியாடினி (……)

**4.** (1) இங்கிலாந்து (2) கிறீன்லாந்து (3) வேல்ஸ்
(4) ஸ்கொட்லாந்து (5) வட அயர்லாந்து (……)

**5.** (1) ஜோர்ஜியா (2) மேரிலண்ட் (3) சன் பிரான்சிஸ்கோ
(4) டெலவெயர் (5) பென்சில்வேனியா (……)

**6.** (1) ஜோசப் பிராங்குவா டுப்ளே (2) ரொபர்ட் கிளைவ் (3) வாரன் ஹேஸ்டிங்ஸ்
(4) கோன்வோலிஸ் (5) வெலஸ்லி (……)

**7.** (1) ஜோன் அடம்ஸ் (2) ஜோர்ஜ் வாஷிங்டன் (3) சார்ள்ஸ் டவுண்ஷென்ட்
(4) சாமுவேல் அடம்ஸ் (5) தோமஸ் ஜெபர்சன் (……)

**8.** (1) மொன்ரோ கோட்பாடு (2) புதிய பொருளாதாரக் கொள்கை
(3) புதிய பேரம் (கொள்கை) (4) ட்ரூமன் கோட்பாடு
(5) மார்ஷல் திட்டம் (……)

[பக். 2 ஐப் பார்க்க

9. (1) முகம்மது அலி ஜின்னா (2) அயூப் கான் (3) சுல்பிகார் அலி பூட்டோ
(4) ஷேக் முஜிபுர் ரகுமான் (5) சியா உல் ஹக் (……)

10. (1) அராபிய ஒத்துழைப்பு (League)
(2) உணவு விவசாய தாபனம் (FAO)
(3) தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த தாபனம் (SEATO)
(4) ஐக்கிய ஆபிரிக்க தாபனம் (OAU)
(5) ஐரோப்பிய யூனியன் (EU) (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) வலொய்ஸ் - ஜெனோவா
(2) ஸ்போர்சா - மிலான்
(3) மெடிஸி - புளோரன்ஸ்
(4) எஸ்தே - பெரரா
(5) கொன்சாகா - மன்டுவா (……)

12. (1) கிரெம்லின் - ரஷ்யா
(2) வெள்ளை மாளிகை - ஐக்கிய அமெரிக்க அரசுகள்
(3) புன்டெஸ்டாக் - இத்தாலி
(4) லோக சபா - இந்தியா
(5) தேசிய மக்கள் காங்கிரஸ் - மக்கள் சீனக் குடியரசு (……)

13. (1) கர்னாடிக் போர்கள் - இங்கிலாந்தும் இந்தியாவும்
(2) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்தும் பிரான்சும்
(3) அபின் யுத்தம் - இங்கிலாந்தும் சீனாவும்
(4) கிரிமியன் போர் - ரஷ்யாவும் துருக்கியும்
(5) ஏழு கிழமைப் போர் - ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் (……)

14. (1) ஜீன் ஜக் ரூசோ - சமூக ஒப்பந்தம்
(2) இரவிந்திரநாத் தாகூர் - பகவத்கீதை
(3) ஜவகர்லால் நேரு - இந்தியா கண்டுபிடிப்பு (Discovery of India)
(4) கே. எம். பணிக்கர் - ஆசியாவும் மேலைத்தேய ஆதிக்கமும்
(5) ஏ. எல். பஸாம் - வியத்தகு இந்தியா (……)

15. (1) அபிசீனியா - எதியோப்பியா
(2) தங்கனிக்கா - தன்சானியா
(3) நியாசலாந்து - மலாவி
(4) அல்ஜீரியா - லிபியா
(5) பெல்ஜியன் கொங்கோ - சயரே (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மகிமைப் புரட்சி | A | "வளமான நாடு பலமிக்க இராணுவம்" |
| (ii) | அமெரிக்கப் புரட்சி | B | "விவசாயிக்கு நிலம்," "முன்னோக்கிய பாய்ச்சல்" |
| (iii) | மேஜி சீர்திருத்தம் | C | "உணவு, நிலம், அமைதி" |
| (iv) | ரஷ்யப் புரட்சி | D | பிரதிநிதித்துவம் இல்லையேல் வரி இல்லை |
| (v) | சீன புரட்சி | E | நிலையான அரசியல் யாப்பு முடியாட்சிக்கு அத்திவாரமிடல் |

(1) ABCDE (2) BADEC (3) BDAEC (4) ECDBA (5) EDACB (……)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



0205

**17.**

| X | Y |
|---|---|
| (i) ஜோர்ஜ் ஸ்டீவன்சன் | A மோட்டார் கார் |
| (ii) அலெக்சாந்தர் கிரகம்பெல் | B தொலைக்காட்சி |
| (iii) கொடிலீப் டைம்லர் | C வானொலி |
| (iv) குக்லிமோ மார்க்கோணி | D புகையிரத எஞ்சின் |
| (v) ஜோன் லொஜி பெயார்ட் | E தொலைபேசி |

(1) DABEC (2) DACBE (3) DEACB (4) ECDAB (5) EDBCA (......)

**18.**

| X | Y |
|---|---|
| (i) பிரம்ம சமாஜம் | A டபிள்யு சி. பனர்ஜி |
| (ii) ஆரிய சாமஜம் | B முகம்மது அலி ஜின்னா |
| (iii) இந்திய தேசிய காங்கிரஸ் | C தயானந்த சரஸ்வதி |
| (iv) சுவராஜ் கட்சி | D மோதிலால் நேரு |
| (v) அகில இந்திய முஸ்லிம் லீக் | E ராம் மோகன் ராய் |

(1) CEABD (2) DEABC (3) DEBAC (4) ECADB (5) EDABC (......)

**19.**

| X | Y |
|---|---|
| (i) விக்டோரிய மகாராணி | A இந்தியாவின் முதல் பெண் பிரதம மந்திரி |
| (ii) அன்னி பெசன்ட் | B இந்தியாவின் சக்கரவர்த்தினி |
| (iii) இந்திரா காந்தி | C இந்தியாவின் சுயாட்சிக் கழகம் (Home rule league) தாபகர் |
| (iv) கோல்டா மேயர் | D பிரித்தானியாவின் முதல் பெண் பிரதம மந்திரி |
| (v) மார்கிரட் தச்சர் | E இஸ்ரேலின் முதல் பெண் பிரதம மந்திரி |

(1) ACEBD (2) BCAED (3) BEACD (4) BEDCA (5) DEACB (......)

**20.**

| X | Y |
|---|---|
| (i) சிப்பாய் கலகம் (1857) | A மஞ்சு அரச பரம்பரையை விரட்டி குடியாட்சியைத் தாபித்தல் |
| (ii) பிரான்ஸ் - பிரஷ்ய போர் (1870 - 1871) | B ஒட்டோமன் ஏகாதிபத்திய முடிவும் புதிய துருக்கி உருவாக்கமும் |
| (iii) சீனப் புரட்சி (1911) | C ஜப்பான் நிபந்தனைகளின்றி சரணடைதலும் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவும் |
| (iv) செவரூஸ் உடன்படிக்கை | D ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் பிரகடனம் |
| (v) ஹிரோஷிமா நாகசாகியில் அணுகுண்டுத் தாக்குதல் | E இந்தியாவில் பிரித்தானிய முடியின் ஆட்சி ஆரம்பம் |

(1) ACBED (2) BDACE (3) CADBE (4) ECABD (5) EDABC (......)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. தேசிய அரசுகள்**
(1) 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன.
(2) தேசிய அரசுகள் முதலில் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் விருத்தியடைந்தன.
(3) 17 ஆம் நூற்றாண்டில் புனித உரோம சாம்ராச்சியத்தில் தேசிய அரசு விருத்தியடைந்தது.
(4) தேசிய அரசுகளில் வலுவான மத்திய அரசாங்கம் இருந்தது.
(5) தேசிய அரசின் முக்கிய கூறு வலுவான நிலையான இராணுவம் ஆகும். (......)

**22. ஜப்பானில் டொகுகாவா காலம்**
(1) டொகுகாவா காலம் 1603 இல் ஆரம்பமானது.
(2) நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஷோகுன்களின் பொறுப்பாக இருந்தது.
(3) டொகுகாவா காலத்தில் மானிய முறை நிலவியது.
(4) சக்கரவர்த்தி அதிமேலான நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தினார்.
(5) டொகுகாவா அரசாங்கம் உத்தியோகபூர்வமாக 'மூடிய' வெளிநாட்டுக் கொள்கையை தாபித்திருந்தது. (......)

[பக். 4 ஐப் பார்க்க

**23.** இந்தோனேசியா
(1) 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்தோனேசியா ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.
(2) இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானால் இந்தோனேசியா கைப்பற்றப்பட்டது.
(3) 1945 இல் சுகர்ணோ இந்தோனேசியாவின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினார்.
(4) 1949 இல் இந்தோனேசியா குடியரசு தாபிக்கப்பட்டது.
(5) இந்தோனேசியா வியட்நாமின் உதவியுடன் தனது சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டமை. (......)

**24.** அமெரிக்க புரட்சி
(1) பொஸ்ரன் தேனீர் விருந்து
(2) முதலாம், இரண்டாம் கண்டத்திட்ட மகாநாடு
(3) சுதந்திரப் பிரகடனம்
(4) அடிமை முறை ஒழிக்கப்படுதல்
(5) பரிஸ் உடன்படிக்கை மூலம் அமெரிக்க புரட்சிப் போர் முடிவுக்கு கொண்டுவரப்படுதல் (......)

**25.** சோவியத் யூனியன்
(1) வி. ஐ. லெனின் போல்ஷ்விக் புரட்சியை வழிநடத்தினார்.
(2) லியோன் ட்ரொஸ்கி போல்ஷ்விக் புரட்சியை ஒழுங்கமைப்பதற்கு உதவிபுரிந்தார்.
(3) லெனினுக்குப் பின்னர் ஜோசப் ஸ்டாலின் சோவியத் யூனியனின் அரச தலைவராகினார்.
(4) நிகிட்டா குருஷேவ் ஸ்ராலினின் கொள்கைகளைக் கண்டனம் செய்தார்.
(5) ஸ்டாலின் உலகப் புரட்சி பற்றிய கருத்துக்கு அதிக விருப்புக் காட்டினார். (......)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... **5** எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** பிலிப்பைன்ஸ் குடியேற்ற ஆட்சி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஸ்பானியர்கள் 1571 இல் மணிலாவைக் கைப்பற்றினர்.
(B) 1898 இல் ஸ்பானியர் பிலிப்பைன்ஸிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.
(C) 1935 இல் ஐக்கிய அமெரிக்க அரசுகளினால் பிலிப்பைன்சுக்கு உள்ளக சுயாட்சி வழங்கப்பட்டது.
(D) 1946 இல் பிலிப்பைன் சுதந்திர குடியாட்சி நாடாகியது. (......)

**27.** பிரித்தானியர் ஆட்சியின் கீழ் பர்மா தொடர்பிலான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) பிரித்தானியர் பர்மாவை கைப்பற்றும் சந்தர்ப்பங்கள் பல்வேறு படிநிலைகளில் இடம்பெற்றது.
(B) யன்டபோ உடன்படிக்கையினால் பிரித்தானியா பர்மா முழுவதையும் கைப்பற்றுவதில் வெற்றியடைந்தது.
(C) 1948 இல் பர்மா சுதந்திரம் பெற்றது.
(D) அவுங்சான் முதலாவது பிரதம மந்திரி ஆனார். (......)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**28.** ஜெர்மனியின் ஐக்கியம் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஜெர்மனியின் ஐக்கியத்தில் மெட்டர்னிக் ஆரம்ப நடவடிக்கையை மேற்கொண்டார்.
(B) ஜெர்மனியின் ஐக்கியத்தில் பிரதானமானது பிரஷ்யாவின் பணியாகும்.
(C) ஜெர்மனியின் ஐக்கியத்தில் பிஸ்மார்க் 'இரத்தமும் இரும்பும்' என்ற கொள்கையைப் பின்பற்றினார்.
(D) பிரான்சின் ஆசீர்வாதத்துடன் ஜெர்மனி ஐக்கியப்படுத்தப்பட்டது. (……)

**29.** இரண்டாம் உலகப் போர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இரண்டாம் உலகப் போரின்போது அச்சு நாடுகள் நேச நாடுகள் என்பன ஒன்றுக்கொன்று எதிராகப் போரிட்டன.
(B) வரலாற்றாசிரியர்கள் சிலர் இரண்டாம் உலகப் போருக்கு ஹிட்லரே முற்றுமுழுதாக அல்லது பெருமளவில் பொறுப்பானவர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.
(C) தோல்வியடைந்த ஜெர்மனியுடன் தொடர்ச்சியான ஒப்பந்தங்கள் பல கையொப்பமிடப்பட்டன.
(D) ரஷ்யர்களின் உதவியுடன் அமெரிக்கர்கள் ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அணுகுண்டுகளைப் போட்டனர். (……)

**30.** சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டம் சோவியத் பொருளாதாரத்தைப் பலவீனமாக்கியது.
(B) குருஷேவ்வின் அமைதியான சகவாழ்வுக் கொள்கை உள்ளக உறுதியில்லாத் தன்மையை உருவாக்கியது.
(C) நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்த நிலையை அடைந்தது.
(D) கொபர்சேவ் கிளஸ்னொஸ்ட் (திறந்த), பெரஸ்தொரிகா (பொருளாதார மீளமைப்பு) ஆகிய கொள்கைகளைப் பின்பற்றினார். (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** அரசின் தலையிடாக் கொள்கை கோட்பாட்டை முன்வைத்த நாடுகளின் செல்வம் (The Wealth of Nation) என்ற ஆக்கத்தை எழுதியவர் யார்?
(1) ஜோன் லொக் (2) தோமஸ் பேன் (3) அடம்ஸ் ஸ்மித்
(4) தோமஸ் மொல்தஸ் (5) டேவிட் ரிக்காடோ (……)

**32.** பரிணாமவாத கொள்கையை முன்வைத்தவர் யார்?
(1) ஐசக் நியூட்டன் (2) சார்ள்ஸ் டார்வின் (3) லூயி பாஸ்டர்
(4) தோமஸ் ஹென்றி ஹக்சிலி (5) ஹேர்பட் ஸ்பென்சர் (……)

**33.** 1930 இல் இந்தோ சீன கம்யூனிஸ்ட் கட்சியைத் தாபித்தவர் யார்?
(1) ஹோ சி மின் (2) வோ நிகுசியன் கியப்
(3) பாம் வான் தொங் (4) பாவோ டாய்
(5) நிகோடின் டியம் (……)

**34.** இந்தியாவின் இறுதி பிரித்தானிய வைஸ்ரோய் யார்?
(1) செம்ஸ்வோட் (2) அர்வின் (3) கிறிப்ஸ்
(4) வவெல் (5) மவுண்ட்பேட்டன் (……)

**35.** கென்யாவின் முதல் பிரதம மந்திரி யார்?
(1) குவோமி நிக்குறுமா (2) ஜூலியஸ் நியரேரே
(3) மில்டன் ஒபோடே (4) ஜோமோ கென்யாடா
(5) கெனத் கவுண்டா (……)

[பக். 6 ஐப் பார்க்க

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | ஒல்லாந்தரினால் உருவாக்கப்பட்ட முன்மாதிரியைப் பின்பற்றி ஆங்கிலேயர் 1602 இல் ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தைத் தாபித்தனர். | பிரித்தானிய அரசுரிமைக்கு கத்தோலிக்கர் மட்டுமே நியமிக்கப்பட்ட வேண்டுமென 1689 இல் உரிமைச் சட்டம் பிரகடனப்படுத்தியது. | (……) |
| **37.** | முதலாவது அபின் யுத்தத்தின் இறுதியில் கையொப்பமிடப்பட்ட நான்கிங் உடன்படிக்கை மூலம் ஹொங்கொங் தீவு பிரித்தானியருக்கு ஒப்படைக்கப்பட்டது. | மொங்குட் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் சயாமில் ஆரம்பித்த நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் சுலாலொங்கோர்ணினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. | (……) |
| **38.** | அரசியல் சமூக புரட்சி என்று அறிமுகப்படுத்தப்படக்கூடிய மெய்ஜி மீளமைப்பு நவீன ஜப்பான் வரலாற்றில் முக்கிய மாற்றத்துக்கான சந்தர்ப்பமாகக் குறிப்பிடப்படுகின்றது. | டொகுகாவா ஷொகுன் முறைமையைப் புரட்டி டயம்கோ சாமுராய் மானிய முறையை வீழ்ச்சியடையச் செய்து மேஜீ மீளமைப்பு மேலைத்தேய மாதிரியிலான அரசியல் யாப்பினை அறிமுகப்படுத்தியது. | (……) |
| **39.** | சர்வதேச சங்கத்தில் ஐக்கிய அமெரிக்க அரசுகள் முக்கிய பங்கினை வகித்தது. | 1946 இல் வின்ஸ்ரன் சேர்ச்சில் ஐரோப்பா கண்டத்தினூடாக பால்டிக் இலிருந்து அட்ரியாட்டிக் வரை "இரும்புத்திரை" வீழ்ந்துள்ளது எனப் பிரகடனப்படுத்தினார். | (……) |
| **40.** | இரண்டாம் உலகப் போரின் பின்னரான ஆண்டுகளில் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனின் செய்மதி (satellite) நாடுகளாகின. | ஜப்பான், அணிசேரா நாடுகள் இயக்கத்தின் உயிர்ப்பான அங்கத்துவ நாடாகும். | (……) |

❊ ❊



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

නූතන ලෝක ඉතිහාසය II (II කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி II)
Modern World History II (Part II)

**25 C** **T** **II**

**நவீன உலக வரலாறு - கி.பி 1500 கி.பி 1989 வரை**

**அறிவுறுத்தல்கள் :**

※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
※ பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
※ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
※ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம்** பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) அட்லஸ் மலை | (ii) கங்கை நதி | (iii) அமேசன் நதி |
| (iv) மத்தியதரைக் கடல் | (v) பீஜிங் | (vi) நன்னம்பிக்கை முனை |
| (vii) மலாக்கா நீரிணை | (viii) பம்பாய் | (ix) புளோரிடா |
| (x) மகலன் நீரிணை | (xi) சுயஸ் கால்வாய் | (xii) துருக்கி |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பாவின் பரம்பல் நவீன உலக வரலாற்றின் தோற்றத்தைக் குறிப்பிடும் பிரதான முன்னோக்கிய பயணமாகும்."

(i) மேற்கு ஐரோப்பாவின் விரிவாக்கத்தை ஆரம்பித்த **இரண்டு** ஐபீரியன் நாடுகளின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) ஆரம்பகால நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய **இரண்டு** ஆட்சியாளர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) ஐரோப்பாவின் விரிவாக்கத்துக்குக் காரணமான முக்கிய விடயங்களைச் சுருக்கமாக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) ஐபீரிய நாடுகளினால் உருவாக்கப்பட்ட குடியேற்ற ஏகாதிபத்தியங்களும் அவற்றின் தாக்கமும் மேற்கு ஐரோப்பாவின் விரிவாக்கத்தில் பெற்ற முக்கியத்துவத்தை கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

**3.** பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்குக் காரணமான அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவாற்றல் ஆகிய காரணிகளைப் பகுப்பாய்வு செய்க. (16 புள்ளிகள்)

**4.** கவூர், கரிபோல்டி ஆகியோரால் நிறைவேற்றப்பட்ட பணிகளை மதிப்பீடு செய்து இத்தாலியை ஐக்கியப்படுத்தும் முக்கிய படிநிலைகளை எடுத்துக்காட்டுக. (16 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒல்லாந்தரின் கீழைத்தேய குடியேற்ற ஏகாதிபத்தியம்.

(ii) 1688 - 1689 ஆங்கிலப் புரட்சி

(iii) சொல்வரீன்

(iv) புதிய ஏகாதிபத்தியம்.

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** 1927 இலிருந்து 1947 வரை இந்தியாவில் தேசிய இயக்கத்தின் முக்கிய படிநிலைகளை எடுத்துக்காட்டுக. (16 புள்ளிகள்)

**7.** "புரட்சியின் பின்னர் ஏற்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தி சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் முக்கிய அடைவு ஆகும்."

(i) சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் தலைவரின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(ii) சீனாவில் கம்யூனிஸ்ட் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் குவோமின்தாங் தலைவர்கள் தப்பியோடிச் சென்ற தீவின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(iii) சீனாவில் கம்யூனிஸ்ட் வெற்றிக்குக் காரணமான விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) 1976 வரை கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட சமூக, பொருளாதார கொள்கைகளை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை? (06 புள்ளிகள்)

(ii) 1965 வரை அமைதி பேணும் நிறுவகமாக ஐக்கிய நாடுகள் சபை எவ்வளவுக்கு வெற்றியடைந்துள்ளது என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஜோர்ஜ் வாஷிங்டன்

(ii) சர்வதேச சங்கம்

(iii) ஜெர்மனியில் நாஸிஸவாதம்

(iv) பனிப்போர் (Cold War)

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

0205

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)


| | | |
|---|---|---|
| නූතන ලෝක ඉතිහාසය II<br>நவீன உலக வரலாறு II<br>Modern World History II | 25C | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න
LOL
Book Store
25% OFF
ALL BOOKS
Including Exercise Books,
CR Books, and B5 Books
ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්
ORDER BOOKS FROM LOL BOOKS STORE
0372060110
WWW.LOL.LK
071 777 4440 (WhatsApp)
Cash On Delivery Available


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!